மணிவாக்கு

தன்னடக்கமே விரதங்களிலெல்லாம் சிறந்தது. அதுவே ஆத்மீக சாதகனின் சாதகமான கடமையுமாகும்.

—சுவாமி சிவானந்தர்

## நமது நோக்கு

### 'தமிழர் தலைநிமிர்கழகம்'

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விஞ்ஞான ஆய்வு கூடக் கட்டடத்திற்கு பத்து லட்சம் ரூபா மானியம் வழங்கியதற்கு, கொழும்பு பழைய மாணவர் சங்கம் நன்றி தெரிவித்திருக்கிறது.

இந்த நற்செய்தி பொதுவாகக் கல்வியில் அக்கறை கொண்ட அனைவருக்கும், சிறப்பாக நாட்டின் சைவ சமூகத்துக்கும் பெருமகிழ்ச்சியளிக்குமென்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாண வைபவங்களின் செழுமையின் சின்னமே யாழ். இந்துக் கல்லூரி நாட்டின் பிரபல பெரிய கல்வி நிலையங்களில் யாழ். இந்துக் கல்லூரி முன்னணியில் திகழ்கிறது.

[illegible]

# உலகிலேயே தாய்மொழியை இழந்தவன் தமிழன்தான்?

**உலகத் தமிழர் பண்பாட்டுக் கழக மாநாடு இன்று மொறிசியஸ் தீவில் ஆரம்பமாகிறது. இம்மாநாட்டையொட்டி கழகத்தலைவர் இர. ந. வீரப்பன் விடுத்துள்ள செய்தி இங்கு தரப்படுகிறது.**

1974ல் யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் உருவாகியது. இதன் முதல் பண்பாட்டு விழா முதலாவது மாநாடாக சென்னையில் 1977 இறுதியில் நடைபெற்றது.

அதில் தீர்மானித்தவாறு 2-வது மாநாடு மொரிசியஸில் 1980 ஆகஸ்ட் 4ம் திகதி 8ம் திகதி முடிகிறது. ஐந்து நாள் மாநாடான இந்த மொரிசியஸ் நாட்டில் உலகத் தமிழ்ப்பண்பாட்டு மாநாடு நடத்துவது, அந்த நாட்டின் சிறப்பின் முதல் பெரிய பத்தியாகும். இதன் மூலமாக நானும் பொதுச் செயலாளரும் ஆசீர்த்து வாழ்த்துக்கள் வழங்கியுள்ளோம்.

[illegible]

### விதைகிழங்கு விநியோகம் ஒத்திவைப்பு

(புலோலி)

1980-81ம் ஆண்டு பெரும்போக விதை உருளைக்கிழங்கை விவசாயிகள் பெற்றுக் கொள்வதற்கு முன் கூட்டியே பதிவு செய்வதற்கான கடைசித் திகதி கடந்த மாதம் 60ம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறை விவசாயப் போதனாசிரியர் திரு பி. பொன்னையா அறிவித்துள்ளார்.

விவசாயிகள் சமர்ப்பிக்க கூடிய அட்டை பெறுதல் தாமதப்பட்ட காரணத்தினாலேயே இத்திகதி பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இவ்வருட வியோகத்தில் விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட விதை கிழங்கும் உள்நாட்டு விதை கிழங்கும் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

### லண்டன் சென்றார்

(மன்னார்)

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வந்த கலாநிதி விஜயரட்ணம் 3 மாத லீவில் லண்டனுக்குச் சென்றுள்ளார்.

## இன்றைய றமழான் சிந்தனை

நோன்பு உள்ளத்தை அமைதியுடன் வைத்து குறைகளை நீக்குகிறது.

தொகுப்பு:
மௌலவி மௌசியா கரீம்

ஸஹர் முடிவு 4-29
நோன்பு திறக்கும் நேரம்: 6-30

அல்லாஹ் ஒப்புக் கொள்ளப்பட்ட நல்லடியாருக்கு சுவர்க்கத்தில் ஒரு உன்னதமான இடமளிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸாம் மாணவர் கிளர்ச்சி

# கைவிடப்பட்டது!

## இம்மாதம் 11-ம் திகதி அரசுடன் பேச்சு

புதுடில்லி; ஆக. 3

**இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸாமில் கடந்த பதினொரு மாதங்களாக இடம் பெற்று வந்த கிளர்ச்சி விலக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த அஸாம் மாணவர்கள் எண்ணெய் தடை தவிர்த்த சகல நடவடிக்கைகளையும் உடனடியாக கைவிடுவதென்று நேற்றிரவு தீர்மானித்துள்ளனர்.

வெளிநாட்டிலிருந்து வந்து குடியேறி தொழில்புரிந்துவரும் வெளிநாட்டவர்களை மாநிலத்திலிருந்து வெளியேற்றுமாறு கோரி அனைத்து அஸாம் மாணவர் சங்கத்தினர் கடந்த 11 மாதங்களாக போராட்டம் நடாத்திவந்தனர்.

பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடி கொடுத்து வந்த இப்பிரச்னையைத்தீர்த்து வைப்பதற்கு மணிப்பூர் முதல்வர் திரு. குரேந்திரஸிங் எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

தமது கிளர்ச்சி நடவடிக்கைகளை விலக்கிவிட்டு அரசுடன் இப்பிரச்னை தொடர்பாக பேச்சு நடத்த மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

திரு. குரேந்திரஸிங்கின் தீவிர முயற்சியின் பலனாக நடைபெறும் இப் பேச்சுவார்த்தைகள் மணிப்பூரின் தலைநகரான இம்பாலில் இம் மாதம் 11ம் திகதி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப் பேச்சுவார்த்தைகள் அஸாமில் வெளிநாட்டவரால் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சுமுகமான தீர்வு ஒன்றை ஏற்படுத்துமென்று அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (கு)

### கூட்டங்களுக்கு தடை!

சென்னை, ஆக. 3

சென்னையில் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடாத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இத் தடையுத்தரவைப்பிறப்பித்த பொலிஸ் கமிஷனர் சமய நிகழ்ச்சிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படுமென்று அறிவித்துள்ளார். [கு

### பனங்கட்டி தொழிற்சாலை

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் சில கிராமங்களில் பனங்கட்டித் தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. [ச]

### தந்திக்கம்பி திருட்டு

[மன்னார்]

பேசாலை ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள ரயில்பாதையில் தந்திக்கம்பிகள் வெட்டப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. தந்திக்கம்பிகளை திருடுவோரே இக்கம்பிகளை வெட்டிச்சென்றிருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். [ச]

### யுவதி பரிதாப மரணம்

[பண்டத்தரிப்பு]

கிணற்றில் தண்ணீர் அள்ளச்சென்ற 18 வயது யுவதி ஒருவர் தவறி விழுந்து நீரில் மூழ்கி மரணமானார். இச்சம்பவம் வட்டுக்கோட்டை கிழக்கில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த கந்தையா சுசீலாதேவி என்னும் 18 வயது இளம் பெண்ணே இவ்வாறு இறந்தவராவார். இவரது மரண விசாரணை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராஜா முன்னிலையில் நடைபெற்றபோது காலம் சென்ற இளம்பெண்ணின் தந்தையான நாகேசு கந்தையா சாட்சியமளிக்கையில்; காலஞ்சென்றவர் எனது கடைசிப் பிள்ளை சம்பவதினத்தன்று பிற்பகல் வாசிகசாலையில் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கும் போது எனது வீட்டில் குளறிச் சத்தம் கேட்டது. நான் ஓடிச் சென்று பார்த்தபோது எனது மகள் கிணற்றினுள் விழுந்திருப்பதைக் கண்டேன். அயலவரின் உதவியுடன் வெளியே எடுத்தோம். அவரைச் சங்கானையிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்ற போது அவர் உயிர் பிரிந்துவிட்டதாகத்தெரிவித்தனர். இவர் மரணத்தில் எவர்மீதும் எனக்கு சந்தேகமில்லை" என்று கூறினார். சாட்சியை சங்கானைப் பொலிசைச்சேர்ந்த திரு. ஜி. குருசிங்க ஆஜர் செய்தார். மரணவிசாரணை அதிகாரி நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பு வழங்கினார்.

## விவசாயிகளின் நலனுக்கு முன்னேற்றச்சங்கங்கள்!

### கிராமங்கள் தோறும் தி. மு. க. நிறுவும்

திருச்சி, ஆக. 3

விவசாயிகளின் நலனுக்காக போராடுவதற்கு ஒவ்வொரு கிராமங்களிலும் விவசாயிகள் முன்னேற்றச் சங்கங்களை அமைப்பதென்று தி. மு. க. தீர்மானித்துள்ளது.

விவசாயிகளின் குறைபாடுகளுக்கு பரிகாரம் காணவும், விவசாயிகளுக்கு நியாயமான வருமானம் கிடைப்பதற்கும் போராடுவதற்கென அமைக்கப்படும் சங்கங்கள் மாவட்ட ரீதியாக இயங்கவுள்ளன.

நேற்று திருச்சியில் நடந்து முடிந்த தி. மு. க. பொதுக்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைப்பதற்காக போராடுவதற்கு விவசாயத்தொழிலாளர் சங்கங்களை அமைக்கவும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி வி. வி. கிரி, திரு. சஞ்சய் காந்தி, இன்னும் அண்ணாமலை ஆகியோரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. [கு]

கம்பூச்சிய - தாய்லாந்து நெருக்கடி:

### கலாநிதி வால்ட்ஹெய்ம் வியட்நாமில் பேச்சுவார்த்தை

ஹனோய், ஆக. 3

கம்பூச்சிய — தாய்லாந்து நெருக்கடியில் தொடர்பாக வியட்நாமுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக ஐ. நா. பொதுச் செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் தலைமையிலான தூதுக்குழு இன்று ஹனோய் வந்துசேர்ந்தது.

வியட்நாம் ஆதரவிலான கம்பூச்சியாவிற்கும் தாய்லாந்திற்கும் இடையிலான நெருக்கடியில் உச்சக் கட்டத்தை அடைந்ததைத் தொடர்ந்து எல்லைப் புறத்தில் பதட்ட நிலைமை காணப்படுகிறது.

கம்பூச்சியாவிலிருந்து வியட்நாமியப்படைகள் வெளியேற வேண்டுமென்று ஐ நா.சபை முன்னர் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையிலேயே இத்தூதுக்குழு பேச்சுவார்த்தை நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆறுபேர் கொண்ட தூதுக்குழுவினர் தாய்லாந்துடன் பேச்சு நடாத்துவதற்காக நாளை பாங்கொக் பயணமாவார்களென்று அறியப்படுகிறது. [கு]

மொறீஷியஸ் மாநாடு

### தமிழக கல்வியமைச்சர் கலந்துகொள்வார்

சென்னை, ஆக 3

மொறீஷியஸ் தீவில் நடைபெறவுள்ள உலகத் தமிழர் பண்பாட்டுக்கழக மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தமிழக கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அங்கு பயணமானார்.

இம்மாநாடு இன்று திங்கட் கிழமை ஆரம்பமாகிறது. [கு]

### பனங்கிழங்கு பாவனை அதிகரிப்பு

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் பனங்கிழங்குகளை ஒடியலாக மாற்றிவருகிறார்கள். மன்னார் மாவட்ட மக்கள் ஒடியலைத் தமக்குத் தேவையான அளவு சேகரித்துவருகிறார்கள்.

இதனால் வெளியிடங்களிலிருந்து பனங்கிழங்கு வாங்குவதற்கு என மன்னார் மாவட்டத்திற்கு வருவோர் பனங்கிழங்கு கிடைக்காது தவிக்கிறார்கள். [ச]

அமெரிக்க ஜனாதிபதிதேர்தல் இப்போது நடந்தால்

## குடியரசுக்கட்சி வேட்பாளர் ரொனல்ரீகன் ஜனாதிபதி கார்ட்டரைத் தோற்கடிப்பார்!

### 'நியூஸ்வீக்' நடாத்திய பொதுசன வாக்கெடுப்பு ஆரூடம்

வாஷிங்டன், ஆக. 3

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் இப்போது நடாத்தப்பட்டால் குடியரசுக்கட்சி வேட்பாளர் திரு. ரொனல்ட் ரீஹன், ஜனநாயகக்கட்சியின் எந்தவொரு வேட்பாளரையும் தோற்கடித்துவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாஷிங்டனிலிருந்து வெளிவரும் "நியூஸ் வீக்" பத்திரிகை நடாத்திய பொதுசன வாக்கெடுப்பில் ஜனநாயகக்கட்சி தனது வேட்பாளராக திரு. கார்ட்டரையோ அல்லது செனட்டர் கென்னடியையோ அல்லது வேறுஎவரை [illegible] நிறுத்தினாலும் குடியரசுக்கட்சி வேட்பாளர் திரு. ரீஹன்தான் வெற்றிபெறுவாரென்று தெரிய வந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் இப்போது நடாத்தப்பட்டால் [illegible] வாக்குகளும், திரு. ரீஹனுக்கு 46 வீத வாக்குகளும், சுயேச்சை வேட்பாளர் திரு. ஜோன் அண்டர்ஸனுக்கு 17 வீத வாக்குகளும் கிடைக்குமென்று அபிப்பிராய வாக்கெடுப்பில் கணிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான ஜனநாயகக்கட்சியின் மாநாடு நடைபெறுவதற்கு இன்னும் ஒரு வாரமே இருக்கின்றன. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான
**கணிதப் பயிற்சி**

6-ஆம் வகுப்பு
புதிய கணிதம் பயிற்சி 5 90
7-ம் வகுப்பு
புதிய கணிதம் பயிற்சி (அச்சில்)
8-ஆம் வகுப்பு
புதிய கணிதப் பயிற்சி 4-75
9-ஆம் வகுப்பு
புதிய கணிதப் பயிற்சி 7-00
2-ஆம் வகுப்பு
கணிதம் பயிற்சிக்கோவை 1-50

**காந்தளகம்**
213, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.


ஈழநாடு 50 சதம்
The EELANAADU

## வீடு தீக்கிரை

(பண்டத்தரிப்பு)

தளிர் வு நேற்றிரவு வீடொன்று தீக்கிரையாக்கப்பட்டு சுமார் 4 ஆயிரம் ரூபா சேதம் ஏற்பட்ட சம்பவம் இரவில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பிரஸ்தாப வீட்டின் உரிமையாளர் கே. சுந்தரம் சண்டிலிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இதை அடுத்து சண்டிலிப்பாய் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு கே. குலசிங்கம் ஸ்தலத்திற்கு விரைந்து தீவிர விசாரணை மேற்கொண்டார்.


பெருமளவில் இறக்குமதி
**ஹொண்டா CD 125**
**ஹொண்டா CD 70**
சிரமைக்கப்பட்டது,
இலாபகரமானது,
வின்ட்ஸ் கிறீன்
சைட்பாக் கிடைக்கும்.
**பல்கன் ஏஜென்சி**

ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.
போன் : 685


### டியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கு

# "கொலைச் சம்பவத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளது சாத்தியம்"

## சட்டவைத்திய அதிகாரி சாட்சியம்

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

"கொலையுண்ட கமலத்தின் கற்புக்கு களங்கம் ஏற்பட்டிருக்கவில்லை. கழுத்து அழுத்திப்பிடிக்கப்பட்டதனால் மூச்சுத்திணறியே மரணம் சம்பவித்திருக்கிறது. இருதயம் பயத்தினால் நின்றதால் மரணம் துரிதமாக நடைபெற்றுள்ளது. இருமார்பகங்களின் மேற்புறத்திலும் தாறுமாறான தழும்புகள் காணப்பட்டன. தொண்டையின் முன்பக்கத்திலும், கைகால்களின் முன்பக்கத்திலும் தோல் தவிட்டு நிறமாக மாறுகின்ற அடையாளம் தென்பட்டது. பெண்ணின் உடம்பில் காணப்பட்ட 164 காயங்களும் இறந்தபெண் தாக்கப்பட்ட இடம் ஒரு கடுமையான கற்கள், குறுணிகள் உள்ள இடம் அல்லது முட்கள் அடர்ந்த இடமாக இருக்கவேண்டுமென்பதைக் காட்டுகின்றது. உயிர் பிரிவதற்கு முன்னரே இக்காயங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும்."

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரனின் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் நடராஜா சரவணபவானந்தன் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. எம். மகேசன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து சாட்சியமளித்த யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவானந்தன் தெரிவித்ததாவது:-

"நான் 15 வருடங்களாக சட்டவைத்திய அதிகாரியாக கடமையாற்றுகிறேன். தற்போது யாழ் சட்டவைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுகின்றேன். நான் இதுவரை 5000க்கும் மேற்பட்ட பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டிருக்கின்றேன். கமலம் இராமச்சந்திரனின் பிரேத பரிசோதனையையும் நான்தான் மேற்கொண்டேன். பருத்தித்துறை நீதவானின் கட்டளைப்படி கடந்த பெப்ரவரி மாதம் 23-ந் திகதி காலை 10-45க்கு யாழ். அரசினர் வைத்தியசாலையில் கமலத்தின் பிரேத பரிசோதனையை மேற்கொண்டேன்.

### கொலைச் சம்பவம்

"இறந்த கமலத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பார்க்கும்போது இக்கொலைச்சம்பவத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்பது சாத்தியமாகின்றது. உதட்டில் இருந்த காயங்கள் பலரும் பலவந்தமாக முத்தம் கொடுத்ததால் ஏற்பட்டது என்று கூறமுடியாது. நான் பிரேத பரிசோதனையை மேற்கொண்டபோது பெண்ணின் வாயிலும் மூக்கிலும் இருந்துவந்த துர்நாற்றம் சடலம் இறைவுறத் தொடங்கிய பின்தான் ஏற்பட்ட துர்நாற்றமாக இருந்தது.

"கழுத்தின் பின்புறத்தில் நகத்தினால் கீறப்பட்ட அடையாளங்கள் தென்படவில்லை. கண்கள் பிதுங்கிய நிலையில் இருந்தது. மூக்கும் வீக்கமுற்றிருந்தது. தலைமயிர் 18 அங்குல நீளமுள்ள கருமையான மயிராகக் காணப்பட்டது. மயிர் உருவப்பட்டு வரக்கூடியதாக இலகுவாக இளக்கமாக இருந்தது. தலைமயிரிலும் மணல் காணப்பட்டது. உதடுகள் நீலம் பாய்ந்து காணப்பட்டன. பற்கள் சேதப்பட்டிருக்கவில்லை, நகங்கள் பிளவுபட்டபடியே இருந்தது.



தோலும் மணிக்கட்டும் விறைக்காமல் இருந்தன; முழங்காலும் கணுக்காலும் விறைத்திருந்தன. மூக்காலும் வாயாலும் இரத்தம் கசிந்திருந்தது.

"இறந்த பெண்ணின் மார்பில் உறுப்புகளைக் கிள்ளிய தடயங்கள் காணப்படவில்லை. கற்பழிக்கப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. இரு மார்பகங்களினதும் மேற்புறங்களில் தாறுமாறான தழும்புகள் காணப்பட்டன. இவற்றுக்குக் காரணம் உடம்பு இழுத்துச் செல்லப்பட்டதாகவும் இருக்கலாம்.

உடம்பின் அடிப்பாகத்திற்கு இரத்தம் அதிகமாக ஓடித் தேங்கி நின்றதால் பிரேதம் கண்டெடுக்கப்பட்ட நிலையில் 5 மணித்தியாலங்கள் தொடக்கம் 10 மணித்தியாலங்கள் வரை இருந்தது தெரிகின்றது. நெஞ்சின் அடிப்பாகத்திலும் கூடுதலாக இரத்தம் தேங்கி நின்றுள்ளது. தொண்டையின் முன்பக்கங்களிலும் தோல் தவிட்டு நிறமாக மாறுகின்ற அடையாளங்கள் தென்பட்டன.

### விசித்திரமாக இருந்தது

நீதவான்: இதற்குக் காரணம் என்ன என்று கூற முடியுமா? — மூச்சுத் திணறி மரணமாகும்போது நகங்கள் உதடு என்பன நீலம் பெறுவது வழக்கம். ஆனால் எனது அனுபவத்தில் ஒருபக்கத்தில் நகங்கள் உதடு என்பன நீலம் பெயர்ந்த விசித்திரத்தை இந்தச் சடலத்தில்தான் கண்டுள்ளேன். எனவே திட்டவட்டமாக காரணத்தைச் சொல்ல முடியாதுள்ளது.

விலாஎலும்புகளோ வேறு எலும்புகளோ முறிவடைந்து காணப்படவில்லை. இருதயம் சாதாரணநிலையில் இருந்தது. ஈரலும் சாதாரணநிலையில் இருந்தது. வயிற்றுக்குள் இருந்த விசித்திரமான துர்நாற்றம் வியப்பையளித்தது. அப்பகுதிகள் அரசாங்க இரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு அங்கிருந்து கிடைக்கப்பட்ட இரசாயன பரிசோதனை அறிக்கையின் படியும் எனது ஆராய்ச்சியின் படியும் வயிற்றுக்குள் நஞ்சோ நஞ்சுத்திரவமோ இருந்ததற்கு அறிகுறிகள் தென்படவில்லை. இரத்தக்கலங்கள் வழமைபோல் இருந்தன. பெண் கருத்தரித்திருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை.

நீதவான்: பெண்ணின் கழுத்து அழுத்தப்பட்ட அதே நேரத்தில் இருதயம் பயத்தினால் நின்று மரணம் சம்பவித்திருக்கலாமா? - அப்படியான சாத்தியக் கூறும் இருக்கலாம்.

## இருவர் கைது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனையை மேற்கொண்டுள்ளார்.

சிவில் உடையில் வந்த ராணுவத்தினர் இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ் இராணுவ முகாமுக்குப் பொறுப்பாகவிருக்கும் பிரிகேடியர் அத்துக்கோறளை நேற்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கத்துடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். (கெ)

## கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் கூட்டுறவு ஆணையாளர் திரு. எஸ். நித்தியானந்தன் மன்னார் மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளார்.

மேல்விசாரணை நாளை செவ்வாய்க்கிழமை பி. ப ஒரு மணிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.


மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிடெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon LTD.
தமது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் திறந்து இயங்கி வருகிறது.

இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
ஃ சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்

இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்! உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை லிமிடெட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்

மக்கினொன் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண். 92. தொலைபேசி: 8154.
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது


## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து இராஜரத்தினம்

கொக்குவிலைச் சேர்ந்த தம்பிமுத்து இராஜரத்தினம்காலமானார். அன்னார்கொழும்பு ஒபாத்தா அன்ட் கொம்பனியைச் சேர்ந்தவரும், கமலராணியின் (ராணி) அருமைக் கணவரும், தம்பிமுத்து (ரவி), ஜெயந்தி, ஆனந்தி, தமயந்தி, சாந்தி ஆகியோரின் அருமைத் தந்தையும், நீதிராஜா, விஜயரத்தினம், திருமதி சோமசுந்தரம் ஆகியோரின் அருமைத் தம்பியுமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று திங்கட்கிழமை 4 ம் திகதி மாலை 5 மணியளவில் இலக்கம்:8, ஹேமபிளேஸ், வெள்ளவத்தையிலுள்ள இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்

6473

## ஒலிம்பிக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒலிம்பிக் போட்டிகளில் சோவியத் யூனியன் கூடுதலான தங்கப் பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது இதுவே முதற்தடவையாகும்.

### 23 வது ஒலிம்பிக்

நேற்றுடன் முடிவடைந்த 22 வது ஒலிம்பிக் போட்டிகளில் எழுபது நாடுகள் கலந்துகொண்டன. 23 வது ஒலிம்பிக் விளையாட்டு விழா 1984 ம் ஆண்டு லொஸ்ஏஞ்ஜல்ஸில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### செல்வி சுப்பையா இராசநாயகி

காலஞ்சென்ற உமையாள்புரம் ஆனையிறவைச் சேர்ந்த சுப்பையாவின் சிரேஷ்ட புத்திரி இராசநாயகி (லேடன் இன்டஸ்றீஸ்) அகாலமரணமாகிவிட்டார். இவர் நாகபூசனியின் அன்பு மகளும், சற்குணராசா (உப்புக்கூட்டுத்தாபனம், ஆனையிறவு), சிறிஸ்கந்தராசா, வரதராசா, செல்வநாயகி (லேடன் இன்டஸ்றீஸ்), சபாநாயகி, ஜீவநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரியும், நாகராசா நவரட்னம், சுந்தரம்பிள்ளை, கனகலிங்கம் (லேடன் இன்டஸ்றீஸ்), நாகராசா (நீர்ப்பாசன இலாகா, கல்மடு), மகாலிங்கம் (லேடன் இன்டஸ்றீஸ்), ஆகியோரின் மருமகளும், கே. வி. கந்தையா மகேஸ்வரியின் பெறுமகளுமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை 12 மணியளவில் 34, கச்சேரி கிழக்கு ஒழுங்கை கந்தையாவின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

6474

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ... 4-ந் திகதி ... வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General Post office Sri Lanka under No. QB/2343/78 The Eelanaadu, Post Box No. 49, Valagam, Eelanaadu, Phone ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org